**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 02.04.2026

அசல் வழக்கு எண்.108 /2022

வா.சா. 1 – முருகேசன், த/பெ. வரதன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியும் எத்தனாவது படித்து உள்ளீர்கள் என்றால் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதி உங்கள் அண்ணன் ஜெமினி என்பவருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் எனக்கு தெரியாது. நான்காம் வகுப்பு வரை படித்துள்ளார். உங்கள் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். இரண்டாவது மனைவி பெயர் பூபதி என்பவருக்கு முறையே ஜெமினி, முருகேசன், காமாட்சி, ஆறுமுகம் ஆகிய நான்கு பிள்ளைகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் அன்னம்மாள் என்பவருக்கு முறையே சிகாமணி, விசாலம், அஞ்சலம், புஷ்பா ஆகிய நான்கு பேர் என்றால் சரிதான். உங்கள் அப்பா வரதன் என்பவர் இரண்டு மனைவிக்கும் பிறந்த ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். முதல் மனைவி மகன் சிகாமணி என்பவருக்கு 3 ஏக்கர் 3 சென்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். உங்கள் மூவருக்கும் சேர்த்து 1 ஏக்கர் 83 ½ சென்ட் மட்டுமே எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். வீட்டுமனை 12½ சென்ட் நிலம் 1ஏக்கர் 66 சென்ட் ஆகும். உங்கள் மூவருக்கும் எழுதிக் கொடுத்ததை விட சிகாமணிக்கு அதிகமான சொத்து என்றால் அவருக்கு கடன் இருந்ததால் அதிகமாக எழுதிக்கொண்டார் அவருக்கு ரூ.1,37,000/– கடன் இருந்தது. அந்த கடன் பொதுவில் இருந்தது. பத்திரத்தில் இல்லாத

சொத்துக்கள் அல்லாமல் வேறு சில சொத்துக்களும் உங்கள் அப்பா எழுதிக் கொடுத்தார் அது கடனுக்காக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் எழுதும்போது உங்கள் தம்பி பெயர் ஆறுமுகம் மைனர் ஆக இருந்தார் என்றால் சரிதான். சர்வே எண் 147/2b அதில் 1 ஏக்கர் 38 சென்ட் இருந்தது. அதில் 38 சென்ட் உங்கள் அப்பாவுக்கு ஒரு பாகமாக எழுதிக் கொண்டார் என்றால் சரிதான். மீதி இருக்கும் 1 ஏக்கர் உங்கள் மூன்று பேருக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பிறகு 1 ஏக்கர் 38 சென்ட் எல்லாரும் சேர்ந்து வேறு ஒருவருக்கு விற்பனை செய்து விட்டீர்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சிகாமணி முதல் பிரதிவாதி கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். சென்ட் நூறு ரூபாய் என்று கிரயம் பேசு ரூபாய்13,800க்கு விற்பனை செய்து விட்டீர்கள் என்றால் சரிதான். அதில் சிகாமணியின் பாகமாக ரூபாய் 3,800/– எடுத்துக் கொண்டார் என்றால் சரியில்லை. என்னுடைய தங்கைக்கு திருமணம் செய்வதற்காக பணம் கொடுத்தார். ஆகவே அந்த பணத்தை அவர் எடுத்துக் கொண்டார் எங்களிடம் சொல்லிவிட்டு தான் எடுத்துக் கொண்டார். எங்களால் பணம் கொடுக்க முடியவில்லை ஆகவே அந்த பணத்தை எடுத்துக் கொண்டார் எங்களுடைய விருப்பப்படி தான் எடுத்துக் கொண்டார். மீதி இருந்த ரூபாய் 10,000/– உங்களுடைய தங்கச்சி செலவிற்காக இரண்டாவது பிரதிவாதி ஜெமினி இடம் கொடுத்து செலவு செய்து கொள்ளுமாறு உங்கள் அப்பா கொடுத்தார் என்றால் சரியில்லை முற்றிலும் தவறானதாகும்.சிகாமணி ரூபாய் 3,800/– எடுத்துச் சென்றதால் அவரிடம் நீங்கள் சண்டை போட்டீர்கள் என்றால் சரிதான். என் அப்பா திருமணம் செய்து

10 ஆண்டுகள் ஆகிறது ஆனால் அந்த பைசாவை நீங்கள் இப்பொழுது எடுக்கிறீர்களே என்று நானும் சண்டை போட்டேன். உங்களுக்கு காதல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணத்தை ஜெமினி என்பவர் தான் உங்களுக்கு அருகில் இருந்து நடத்தி வைத்தார் என்றால் சரியில்லை. உங்கள் அண்ணன் மற்றும் உங்கள் அப்பா யாரும் உங்கள் திருமணத்திற்கு வரவில்லை என்றால் சரியில்லை சிகாமணி தலைமையில் தான் திருமணம் நடைபெற்றது. நீங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக இருந்த சமயத்தில் பூசிவாக்கம் கிராமத்தில் சர்வே எண் 114/2ஏ மற்றும் 114/2பி அதாவது 66 ½ சென்ட் உங்கள் பெயரில் இருக்கிறதா என்றால் என்னுடைய சொந்த பெயரில் வாங்கி உள்ளேன். அது என்னுடைய சொத்தாகும். நீங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்த போது அந்த சொத்தை வாங்கினீர்கள் என்றால் சரியில்லை. வேடல் கிராமத்தில் சர்வே எண் 116/3ஏ அதாவது 33.30 சென்ட் நிலம் உங்கள் பெயரில் இருக்கிறது என்றால் இருக்கிறது. அந்த சொத்து உங்கள் அண்ணனுடன் சேர்ந்து வாங்கியது என்றால் சரியில்லை. நான் வேலைக்கு சென்று சம்பாதித்து என்னுடைய பணத்தில் வாங்கினேன். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்து அந்த பணத்தில் வாங்கியது ஆகும். அது என்னுடைய தனிப்பட்ட சொத்தாகும். பாவா சாகிப் பேட்டை வீடு உள்ளது என்றால் வீட்டு கடன் வாங்கி நான் அதை வாங்கினேன். அந்த சொத்தினை உங்கள் அண்ணன் அனைவரும் சேர்ந்து உங்கள் பெயரில் வாங்கினார்கள் என்றால் சரியில்லை என்னுடைய தனிப்பட்ட

**சொத்துதான். அந்த சொத்துக்கு லோன் போட்டு தனிப்பட்ட சொத்து வாங்கினீர்கள் உங்கள் பையன் பெயரில் என்றால் சரிதான்.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram